17.3.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விடுபட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம்

வறட்சி நிவாரணம் கிடைக்காத, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும் என்று மதிமுக வலியுறுத்தியுள்ளது. இதுகுறித்து, அக்கட்சியின் திருப்பூர் வடக்கு ஒன்றியச் செயலர் வி.கே.சத்தியமூர்த்தி தலைமையில் விவசாயிகள் ஆட்சியர் கு.கோவிந்தராஜிடம் திங்கள்கிழமை கோரிக்கை மனு அளித்தனர். அதில், கூறியிருப்பது: அவிநாசி வட்டம் தொரவலூர் கிராமத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகள் 105 பேருக்கு ரூ.1,42,874, மானாவாரி விவசாயிகள் 184 பேருக்கு ரூ.11,24,171 வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த விவசாயிகளுக்கு உரிய நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை. இதுதொடர்பாக 2013-ஆம் ஆண்டு செப்டம்பர் 23-ஆம் தேதியும், டிசம்பர் 16-ஆம் தேதியும் மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை மனுக்கள் அளிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து, தகுதியான விவசாயிகள் 74 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ.12,67,050 வழங்கப்பட வேண்டிய நிலையில், இதுவரை ரூ. 9,65,940 மட்டும் ஏற்கெனவே வழங்கப்பட்டது. நிலுவைத் தொகை ரூ. 3,01,110 இதுவரை வழங்கப்படவில்லை. எனவே, விடுபட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணத் தொகைகளை விரைவில் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். காலதாமதம் ஏற்பட்டால் விவசாயிகளைத் திரட்டி மதிமுக சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் போராட்டம் நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேளாண் கருவிகள் மையம் அமைக்க விவசாயக் குழுக்கள் விண்ணப்பிக்கலாம்

வேளாண் கருவிகள் வழங்கும் மையம் (�scீன்ள்ற்ம் ட்ண்ழ்ண்ய்ஞ் ஸ்ரீங்ய்ற்ழ்ங்) அமைக்க விரும்பும் விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தமிழக சட்டப்பேரவையின் 110 விதியின்கீழ், தமிழகத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வேளாண் கருவிகள், இயந்திரங்கள் வழங்குவதற்கான மையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை தமிழக முதல்வர் வெளியிட்டிருந்தார். இதன் முதற்கட்டமாக, திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் வட்டாரத்தில் வேளாண் கருவிகள் வழங்கும் மையம் அமைப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. இதன் அடிப்படையில், விவசாயிகள் பங்களிப்பாக ரூ.15 லட்சமும், 40 சதவீத அரசு மானியம் ரூ.10 லட்சமும் சேர்த்து மொத்தம் ரூ.25 லட்சத்தில் வேளாண் கருவிகள் வாங்கி, குறைந்த விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, மாவட்டத்திலுள்ள மற்ற 12 வட்டாரங்களிலும் இத்தகைய வேளாண் கருவிகள் வழங்கும் மையத்தை 2015-16 ஆம் நிதியாண்டில் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. எனவே, திருப்பூர் மாவட்டத்திலுள்ள வட்டார விவசாயக் குழுக்கள், நீரினை பயன்படுத்துவோர் சங்கங்கள், சுயஉதவிக் குழுக்கள், கிராமத்திலுள்ள வேலையில்லாத வேளாண் மற்றும் வேளாண் பொறியியல் பட்டதாரி இளைஞர்கள், நபார்டு சங்கங்கள், பண்ணை மகளிர் மேம்பாட்டுக் குழுக்கள் மற்றும் பங்களிப்பு செலுத்த வசதியுள்ள முன்னோடி விவசாயிகள் வட்டார அளவில் ஏதேனும் ஒரு குழு அல்லது முன்னோடி விவசாயிகள் மூலம் வேளாண் கருவிகள், இயந்திரங்கள் வழங்கி, அரசு நிர்ணயிக்கும் வாடகைக்கு வழங்கப்பட உள்ளது. எனவே, இம் மாவட்டத்திலுள்ள முன்னோடி விவசாயிகள், விவசாயக் குழுக்கள், சங்கங்கள் வேளாண் கருவிகள் வழங்கும் மையம் அமைக்க விரும்பினால், திருப்பூர், பல்லடம்,

அவிநாசி, பொங்கலூர், ஊத்துக்குளி வட்டாரப் பகுதியைச் சேர்ந்தவர்கள் உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, பல்லடம் சாலை, திருப்பூர் என்ற முகவரியிலுள்ள அலுவலகத்தையும், தாராபுரம், குண்டடம், மூலனூர், காங்கயம், வெள்ளக்கோவில் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, தளவாய்ப்பட்டினம் சாலை, தாராபுரம் என்ற முகவரியிலுள்ள அலுவலகத்தையும், உடுமலை, குடிமங்கலம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள், உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, எண்.34, 35 யசோதா ராமலிங்கம் லேஅவுட், உடுமலை என்ற முகவரி அலுவலகத்தையும் அணுக வேண்டும், எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>ஓமலூரில் விவசாயிகளுக்கு ரூ.20 லட்சம் விவசாயக் கடன் அளிப்பு</u>**

ஓமலூரில் விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கி சார்பில் ரூ.20 லட்சம் மதிப்பில் விவசாயக் கடன் வழங்கப்பட்டது. ஓமலூர் அருகேயுள்ள தாத்தியம்பட்டி, தாராபுரம், சிக்கனம்பட்டி ஊராட்சிகளில் விவசாயிகள் பெரும்பான்மையாக வசித்து வருகின்றனர். இந்தப் பகுதிகளில் பல்வகை பூக்கள், மஞ்சள், கரும்பு உள்பட பல்வேறு பயிர்கள் விளைவிக்கப்படுகிறது. இந்தப் பகுதி விவசாயி களின் நலன்காக்க தாத்தியம்பட்டியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் உள்ளது. இந்தச் சங்கத்தின் சார்பில் அந்தக் கிராம மக்களுக்கு விவசாயம், ஆடு, மாடுகள் வாங்குவதற்கும் கடன்கள் வழங்கப்படுகின்றன. இதையடுத்து, திங்கள்கிழமை நடைபெற்ற கடன் வழங்கும் விழாவில் ஓமலூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் பல்பாக்கி சி. கிருஷ்ணன் கலந்துகொண்டு 18 பேருக்கு வட்டியில்லா பயிர்க் கடனும், 14 பேருக்கு பட்டி ஆடுகள் வாங்குவதற்காக கடனும், 10 பேருக்கு கறவை மாடுகள் வாங்க கடனும் வழங்கினார். இந்த விழாவில் மொத்தம் 42 பேருக்கு ரூ.20

லட்சம் மதிப்பில் கடன் வழங்கப்பட்டது. இந்தச் சங்கம் சுமார் ரூ.10 கோடி மதிப்பில் வரவு செலவு செய்து வருவதால், விவசாயிகள் பெற்ற கடனைக் குறித்த காலத்தில் கட்டிமுடித்து மீண்டும் கடன் பெற்று பயன் பெறுமாறு வலியுறுத்தப்பட்டது.

**வேளாண் துறையில் உள்கட்டமைப்பு வசதி அதிகரிப்பு அவசியம்**

வேளாண் துறையில் உள்கட்டமைப்பு வசதியைப் பெருக்குவது அவசியம் என்றும், எம்.பி. தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் மக்களவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது அதிமுக உறுப்பினர்கள் வலியுறுத்தினர். மக்களவையில் திங்கள்கிழமை நடைபெற்ற 2015-16-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு அதிமுக உறுப்பினர்கள் பேசியதாவது: கே.கோபால் (நாகப்பட்டினம்): உலக அளவில் மிகவும் அதிகமான வளமுள்ள விவசாய நிலங்கள் இந்தியாவில் உள்ளன என்றாலும் நம் உணவு உற்பத்தித் திறன் குறைவாகவே உள்ளது. நாம் நாட்டை விட சீனாவில் விளைச்சல் இரு மடங்கு அதிகமாக உள்ளது. உலகின் சராசரி அரிசி உற்பத்தி அளவு ஹெக்டேர் ஒன்றுக்கு 4.3 டன்களாக உள்ள நிலையில், விவசாய பண்ணைத் தொழிலில் மிகவும் வெற்றிகரமாக உள்ள நம் நாட்டின் பஞ்சாப் மாநிலத்தில் ஹெக்டேர் ஒன்றுக்கு நெல் விளைச்சல் 3.8 டன்னாக உள்ளது. இதிலிருந்து கண்கூடாகத் தெரிவது என்னவென்றால் விவசாயத் துறையை பொறுத்தவரை நம் நாட்டில் பெருமளவில் உள்கட்டமைப்பு வசதி பெருக்கமும், புதிய தொழில்நுட்ப உத்திகள் கொண்டு வரப்பட வேண்டும். அ.அன்வர்ராஜா (ராமநாதபுரம்): ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் ஒரு கிராமத்தை தத்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளனர். மத்திய அரசு நிதி ஒதுக்கும்பட்சத்தில் ஒரு கிராமம் மட்டுமல்லாமல் பல கிராமங்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தத்தெடுத்துக்கொள்ள முடியும். நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியை

கிராமம் தத்தெடுக்கும் திட்டத்திற்கும், தூய்மை இந்தியா திட்டத்திற்கும் பயன்படுத்த வேண்டும் என்று பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது. இது நியாயமற்ற நடவடிக்கையாகும். நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு நலப் பணிகளை செய்கின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர் செலவிடும் தொகையை விட ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதியில் உள்ள பல சட்டப்பேரவை உறுப்பினர்கள் செலவிடும் தொகை பல மடங்காகும். ஆகவே, நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியை ஓராண்டுக்கு ரூ. 5 கோடி என்பதை ரூ.30 கோடியாக உயர்த்த வேண்டும் என கோருகிறேன்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>**

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஆட்சியர் வீரராகவ ராவ் தலைமையில், வரும் 20ம் தேதி நடைபெற உள்ளது. அப்போது, மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே, இம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமாறு, ஆட்சியர் வீரராகவ ராவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஏலத்தோட்டங்களில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

கம்பம் : கோடைமழையால் ஏலத்தோட்டங்கள் குளிர்ந்துள்ளன.
ஏலச்செடிகள் வறட்சியின் பிடியில் இருந்து தப்பித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இடுக்கி மாவட்டத்தில் உள்ள ஏலத் தோட்டங்களுக்கு கோடையில் வறட்சியை சமாளிப்பதில் ஆண்டுதோறும் சிக்கல் ஏற்படும். மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் கடும் வறட்சி ஏற்படும். ஏலச்செடிகள் காய்ந்து விடும். கிணற்றில் தண்ணீர் வைத்துள்ள விவசாயிகள் ஓரளவிற்கு சமாளிக்க முடியும். இந்த ஆண்டு கடந்த இரண்டு மாதங்களாக மழை பெய்யவில்லை. வறட்சியில் சிக்கி ஏலச்செடிகள் பாதிப்பு வரும் என்ற நிலையில் சில வாரங்களாக மிதமான மழை கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் முழுவதும் பெய்துள்ளது. இதனால் ஏலச்செடிகள் வறட்சியின் பிடியில் இருந்து தப்பியுள்ளன. புளியன்மலை, வண்டன்மேடு, மாலி, இஞ்சிப்பிடிப்பு போன்ற பகுதிகளில் குறைவான மழையே பெய்துள்ளது. பூப்பாறை, கஜானபாறை, வெங்கலப்பாறை, சுல்தானியா, நெடுங்கண்டம், மாதவன்கானல், கல்தொட்டி, கணவாக்குழி உள்ளிட்ட பகுதிகளில் நல்ல மழை பெய்துள்ளது. ஏலக்காய் சாகுபடி தொழில்நுட்ப ஆலோசகர் அன்பழகன் கூறுகையில், "தற்போது பெய்துள்ள மழை ஏலச்செடிகளுக்கு வரப்பிரசாதமாகும். இந்த மழை தொடர்ந்தால் வரும் ஜூலையில் காய் முன்கூட்டியே கிடைக்க வாய்ப்புள்ளது. மழை குறைந்தால் காய் வருவது தாமதமாகும். வரத்தும் குறையும்" என்றார்.

## 5 கால்நடை மருந்தகம் தரம் உயர்த்த திட்டம்

மேட்டூர்:சேலம் மாவட்டத்தில், ஐந்து கால்நடை மருந்தகம், நடப்பாண்டு கால்நடை மருத்துவமனையாக, தரம் உயர்த்தப்படும் என, எதிர்பார்க்கப் படுகிறது.சேலம் மாவட்டத்தில், சேலத்தில் ஒரு பன்முக கால்நடை

மருத்துவமனை, மேட்டூர், ஏற்காடு, ஓமலூர், வீரபாண்டி, ஆத்தூர், இடைப்பாடி ஆகிய இடங்களில், கால்நடை மருத்துவமனை, ஓமலூர், சேலம், ஆத்தூர், சங்ககிரியில் நடமாடும் கால்நடை மருத்துவமனை உள்ளது. இது தவிர மாவட்டம் முழுவதும், 120 கால்நடை மருந்தகம் உள்ளது.மருந்தகங்களுக்கு சிகிச்சைக்கு வரும், கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில், அதற்கேற்ப மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும். சேலம் மாவட்டத்தில், காடையாம்பட்டி, மேச்சேரி, சங்ககிரி, பெத்தநாயக்கன்பாளையம், பனமரத்துப்பட்டி ஆகிய, 5 இடங்களில் கால்நடை மருந்தகங்கள் உள்ளது.இந்த மருந்தகங்களுக்கு சிகிச்சைக்கு வரும் கால்நடைகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால், ஐந்து கால்நடை மருந்தகங்களையும், மருத்துவமனைகளாக தரம் உயர்த்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளது. பட்ஜெட் கூட்டத்தில் இதற்கான அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## விவசாயிகள் சங்கக்கூட்டம்

ராமநாதபுரம் : தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்க தாலுகா அமைப்பு கூட்டம் தலைவர் சண்முகம் தலைமையில்நடந்தது. மாவட்ட செயலர்கள் ஆதிமூலம், சுந்தர்ராஜன், துணைத்தலைவர் காந்தி, பொருளாளராக அங்குச்சாமி பங்கேற்றனர். புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில், பயிர் இன்சூரன்ஸ் தொகையை வழங்காததை கண்டித்து வரும் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்வது எனவும், கண்மாய் வரத்துக்கால்வாய்களை தூர் வார வேண்டும், விவசாயத்திற்கு மத்திய, மாநில அரசுகள் தனி பட்ஜெட் தாக்கல் செய்ய வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## முட்டை விலை 265 காசாக நிர்ணயம்

நாமக்கல்:தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 265 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 250 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 15 காசு அதிகரித்து, 265 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 285, ஹைதராபாத், 248, விஜயவாடா, 254, பர்வாலா, 252, மும்பை, 280, மைசூரு, 273, பெங்களூரு, 275, கோல்கத்தா, 310, டில்லி, 265.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர்கள், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, ஒரு கிலோ, 38 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 76 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## கறிக்கோழி விலை உயர்வு 5 மாதத்துக்கு பின் ரூ. 76 தொட்டதால் மகிழ்ச்சி

நாமக்கல்:வரும், 21ம் தேதி தெலுங்கு வருட பிறப்பு எனும், யுகாதி திருவிழாவை முன்னிட்டு, கறிக்கோழி தேவை அதிகரித்துள்ளதால், ஐந்து மாதத்துக்கு பின், பண்ணை விலை, 76 ரூபாயை தொட்டது.பல்லடம் கறிக்கோழி ஒருங்கிணைப்பு கமிட்டியின் கட்டுப்பாட்டில், கோவை, ஈரோடு, நாமக்கல், கிருஷ்ணகிரி, ராமநாதபுரம், தூத்துக்குடி, பல்லடம், நாகர்கோவில் உள்ளிட்ட மாவட்டங்களில், 70 லட்சம் கறிக்கோழி வளர்க்கப்பட்டு, மாதம்

தோறும், ஐந்து கோடி கிலோ அளவுக்கு கறிக்கோழி உற்பத்தி செய்யப்படுகிறது. அவை, தமிழகம் மட்டுமின்றி வெளிமாநில, நாடுகளில் நேரடியாகவும், பதப்படுத்தப்பட்டும், சப்ளை செய்யப்படுகிறது. கடந்த, ஐந்து மாதங்களாக, கறிக்கோழி விற்பனையில் ஏற்பட்ட தேக்கத்துக்கு இடையே, மீண்டும் விலை படிப்படியாக உயர்ந்து வருவதால், கறிக்கோழி பண்ணையாளர்கள் மகிழ்ச்சியுடன் உள்ளனர். கேரளா பறவை காய்ச்சல் பாதிப்பு, ஐயப்ப சீஸன், புரட்டாசி, கார்த்திகை மாத விரதம் முடிவு ஆகியவற்றால் வீழ்ச்சி கண்ட கறிக்கோழி விலை, தற்போது, யுகாதி (மார்ச், 21), கோடை துவக்கம் ஆகியவற்றால், உயரத் துவங்கியுள்ளது.கடந்த, 2014ம் ஆண்டு, அக்டோபர், 30ம் தேதி, 76 ரூபாய்க்கு, பண்ணை கொள்முதல் விலையை, பல்லடம் கறிக்கோழி ஒருங்கிணைப்பு கமிட்டி (பி.சி.சி.,) நிர்ணயம் செய்தது. அதன்பின், படிப்படியாக குறைந்து, கிலோ, 45 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்தது. நேற்றைய விலை, 76 ரூபாயாக பி.சி.சி., நிர்ணயம் செய்தது. ஐந்து மாதத்துக்கு பின், மீண்டும், 76 ரூபாயை கறிக்கோழி விலை உயர்ந்துள்ளதால், பண்ணையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.பண்ணை விலையில் இருந்து, 30 சதவீதம் வரை உயர்த்தப்பட்டு, சில்லரை விற்பனையில், தலா ஒரு கிலோ உயர் எடை கோழி, 100 ரூபாயாகவும், தோலுரித்த கோழி, 120 ரூபாய் வரை, விற்பனை செய்யப்படுகிறது.

**<u>திருப்புவனத்தில் 40.2 மி.மீ., மழை</u>**

சிவகங்கை : மாவட்டத்தில் அதிகபட்சமாக திருப்புவனத்தில் 40.2 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. கோடை மழையால் 2ம் போக நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த சில நாளாக வெயிலின் கொடுமை அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில் த மழை

பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. சிவகங்கை, திருப்புவனம், காரைக்குடி பகுதியில் மழை பெய்துள்ளது. கோடை மழையால் 2ம் போக நெல் சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மார்ச் 15 அன்று காலை 8 மணி நிலவரப்படி காரைக்குடி 6.2; மானாமதுரை 9.0; சிவகங்கை 23; திருப்புவனம் 10.4; திருப்புத்தூர் 17.0; இளையான்குடி 25.0; தேவகோட்டை 10.3 மி.மீ., மழை பதிவானது. நேற்று காலை நிலவரப்படி காரைக்குடி 6.0; திருப்புவனம் 40.2; திருப்புத்தூர் 6.0; இளையான்குடி 2 மி.மீ., வரை பதிவானது. மாவட்டத்தில் அதிகபட்சமாக திருப்புவனத்தில் 40.2 மி.மி., வரை மழை பதிவானது.

## உரம் தயாரிக்கும் பயிற்சி

விருதுநகர் : விருதுநகர் பொட்டல்பட்டியில் விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் பயிர் கழிவுகள் மேலாண்மை குறித்த பயிற்சி நடந்தது. வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் முருகவேல் தலைமை வகித்தார். இணை இயக்குனர் சுப்பையா பேசினார். தொழில்நுட்ப மேலாளர் பெருமாள் சாமி , மாரிராஜ், பார்வதி பங்கேற்றனர்.

## ராஜபாளையத்தில் மழை

ராஜபாளையம் : ராஜபாளையம் நகரில் நேற்று காலை 10 மணி முதல் சாரல் மழை பெய்தது. பிற்பகல் 1 மணி முதல் ஒரு மணிநேரம் மழை பெய்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக கோடைகாலத்தில் ராஜபாளையம் நகரின் குடிநீர் ஆதாரமாக உள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் மழை பெய்வதில்லை. இதனால் ராஜபாளையம் நகரில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு ஒரு மாதத்திற்கு ஒருமுறை சப்ளை நடந்தது. நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து உப்புதண்ணீருக்கும் பிரச்னை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த வாரம் மலையில் தொடர்மழை பெய்தது. தற்போது நகரிலும் மழை பெய்ததால், இந்த கோடை காலத்தில் குடிநீர் தட்டுப்பாடு குறையும் வாய்ப்பு

உள்ளது. ராஜபாளையம் : ராஜபாளையம் நகரில் நேற்று காலை 10 மணி முதல் சாரல் மழை பெய்தது. பிற்பகல் 1 மணி முதல் ஒரு மணிநேரம் மழை பெய்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக கோடைகாலத்தில் ராஜபாளையம் நகரின் குடிநீர் ஆதாரமாக உள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் மழை பெய்வதில்லை. இதனால் ராஜபாளையம் நகரில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு ஒரு மாதத்திற்கு ஒருமுறை சப்ளை நடந்தது. நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து உப்புதண்ணீருக்கும் பிரச்னை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த வாரம் மலையில் தொடர்மழை பெய்தது. தற்போது நகரிலும் மழை பெய்ததால், இந்த கோடை காலத்தில் குடிநீர் தட்டுப்பாடு குறையும் வாய்ப்பு உள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>முட்டை விலை 15 காசு உயர்வு</u>**



நாமக்கல்: நாமக்கல்லில் நேற்று நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 250 காசில் இருந்து 15 காசு உயர்த்தப்பட்டு, 265 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.31 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி விலை ரூ.76 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விலை உயர்வு குறித்து தமிழ்நாடு முட்டை கோழி பண்ணையாளர்கள் சம்மேளன துணைத்தலைவர் சுப்பிரமணி கூறுகையில், கடந்த வாரம் 20 பைசா குறைக்கப்பட்டதால் அனைத்து பண்ணைகளிலும் இருந்த முட்டை

விற்பனையாகிவிட்டது. இதனால் தற்போது தேவை அதிகரித்ததால் விலை உயர்த்தப்பட் டுள்ளது'' என்றார். பிறமண்டலத்தில் நேற்று நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை (காசுகளில்): சென்னை 285, பெங்களூர் 275, மைசூர் 273, ஐதராபாத் 248, மும்பை 280, டெல்லி 265 காசுகள்.

**<u>மீன் உணவு தயாரிப்பு பயிற்சி சான்றிதழ் வழங்கும் விழா</u>**

புவனகிரி, : தேசிய மீன் வளர்ச்சி வாரியம் மற்றும் பரங்கிப்பேட்டை எம்.எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் மீனவர்களுக்கு மதிப்பு கூட்டிய மீன் உணவு பொருட்கள் தயாரித்தல் பயிற்சி முகாம் பரங்கிப்பேட்டையில் உள்ள கிராம வள மையத்தில் நடந்தது. இந்த பயிற்சி முடித்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. எம்.எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் திட்ட அலுவலர் இளங்கோவன் தலைமை தாங்கினார். கடலூர் மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரி டாக்டர் ராஜா சிறப்பு விருந்தினராக பங்கேற்று பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பேசினார். வட்டார உணவு பாதுகாப்பு ஆய்வாளர்கள் பரங்கிப்பேட்டை அருண்மொழி, விருத்தாசலம் நல்லதம்பி, குறிஞ்சிப்பாடி சுப்பிரமணியன் ஆகியோர் பேசினர். நிகழ்ச்சியில் புதுக்குப்பம், சி.புதுப்பேட்டை, சின்னூர் வடக்கு, சின்னூர் தெற்கு, கிள்ளை, பரங்கிப்பேட்டை, எம்ஜிஆர் திட்டு, அய்யம்பேட்டை ஆகிய கிராமங் களை சேர்ந்த பயனாளிகள் பங்கேற்றனர். ஏற்பாடுகளை சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தை சேர்ந்த அருள்தேவன், ஸ்ரீகாந்த் ஆகியோர் செய்திருந்தனர்.

**<u>மரவள்ளி கிழங்கிற்கு தனி ஆணையம்</u>**

கள்ளக்குறிச்சி, : கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனை மையத்தில் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. தேசிய நெடுஞ்சாலையால் பாதிக்கப்பட்டவர்கள் நலச்சங்க தலைவர் கோபாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். தனசேகர் வரவேற்றார். செல்வராஜ், தேவராஜ், கனகராஜ், மாநில செய்தி தொடர்பாளர்

புருசோத்தமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் எம்எல்ஏ பழனிசாமி, டெல்டா பாசன விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ரவீந்திரன், பாரதியகிசான் சங்கத்தலைவர் அய்யாக்கண்னு, தமிழக மரவள்ளி உற்பத்தியாளர் சங்க மாநில தலைவர் குமார், மாவட்ட தலைவர் செல்வராஜ், செயலாளர் பழனியப்பன், துணைத்தலைவர் கனகராஜ், கோவை மாநகர் தலைவர் தங்கராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மத்திய, மாநில அரசுகள் விவசாயிகள் வங்கிகளில் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்தல், கரும்புக்கு விலை நிர்ணயிக்கும் போது சர்க்கரை சத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு நிர்ணயிக்காமல் கரும்பாலை கழிவான மொளாசசில் இருந்து, கிடைக்கும் எரிசாராயத்தை பயன்படுத்தி இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபான வருமானத்தையும், கரும்புச்சக்கையிலிருந்து கிடைக்கும் மின்சாரம் ஆகியவற்றையும் கணக்கில் கொண்டு டன்னுக்கு ரூ.3500 விலை நிர்ணயிக்க மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக்கொள்வது, சர்க்கரைத்துறை ஆணையத்திற்கு இணையாக மரவள்ளிக்கு தனி ஆணையம் அமைத்து அரசே கொள்முதல் செய்தல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பழனியப்பன் நன்றி கூறினார்.

<u>மாவட்டத்தில் 70 % மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி</u>

கோவை, : கோவை மாவட்டத்தில் கோமாரி நோய் பரவலை தடுக்க 70 சதவீதம் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மாடுகளுக்கு கோமாரி நோய் பரவுவதை தடுக்க கடந்த 1ம் தேதி முதல் 8வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணிகள் நடக்கிறது. அதன்படி, கோவை மாவட்டத்தில் உள்ள 2 லட்சத்து 42 ஆயிரத்து 775 மாடுகளுக்கு தடுப்பூசிகள் போடப்படவுள்ளது. இதற்காக கால்நடை

பராமரிப்பு துறையினர் சார்பில் 72 தனிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் மாடுகளுக்கு தடுப்பூசி போடும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். நரசீபுரம், நெகமம், கோவில்பாளையம் கோசாலையில் உள்ள மாடுகளுக்கு தடுப்பூசிகள் போடும் பணிகள் 90 சதவீதம் நிறைவடைந்துள்ளது. இம்முகாமில் நான்கு மாதங்களுக்கு மேல் உள்ள கன்றுகளுக்கும், சினை மாடுகளுக்கும் தடுப்பூசி போடப்படுகிறது. தடுப்பூசி போடப்பட்ட மாடுகளுக்கு தனித்தனியாக அடையாள அட்டை வழங்கப்படுகிறது. ஒரு நாளைக்கு சராசரியாக 11,100 மாடுகள் வரை போடப்படுகிறது. தற்போது வரை 70 சதவீத மாடுகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது. தடுப்பூசி முகாம் வரும் 22ம் தேதி வரை நடக்கிறது. இம்முகாமில் விடுபடும் மாடுகளுக்கு மார்ச் 23ம் தேதி முதல் 31ம் தேதி வரை சிறப்பு முகாம் மூலம் தடுப்பூசிகள் போட கால்நடை பராமரிப்புதுறையினர் முடிவுசெய்துள்ளனர்.

## அதிக மகசூல் பெற வீரிய ஒட்டு ரக மக்காச்சோளம் சாகுபடியில் நவீன தொழில்நுட்பம்

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் வீரிய ஒட்டு மக்கா சோளம் சாகுபடி தொழில் நுட்பம் பற்றி சேதுபாவாசத்திர வட் டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மக்காசோளம் கால் நடை தீவனமாகவும், சமை யல் எண்ணை எடுப்பதற்காகவும் பயன்படுவதோடு தொழிற் சாலைகளில் மக்காச்சோளம் ஸ்டார்ச், பிரீ வர்ஸ், மக்காச்சோளம் மைதா, சிரப், சர்க்கரை, குளுக்கோஸ் போன்ற பல பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது. இதில் கோ-1, கே-1, கங்கா-5, கே.எச் -1,2,3, கோ.எச்.எம் -5, எம் -900, எம்.ஹைசெல், சின்ஜென்டா, என்.கே -6240, பயனீர் -30 வி -62, பயனீர் -30 வி -92 மற்றும் பிக்பாஸ் ஆகியன முக்கிய வீரிய ஒட்டு

ரகங்களாகும். ஏக்கருக்கு 6 கிலோ விதை பயன்படுத்த வேண் டும். இத்துடன் உயிர் உர விதை நேர்த்தியும் செய்ய வேண்டும். ஒரு ச.மீ 8 செடிகளும், ஒரு ஏக்கரில் 32240 செடிகளும் இருக்குமாறு பயிர் எண்ணிக் கையை பராமரிக்க வேண் டும். விதைப்புக்கு முன் 1 ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் அல்லது தென்னை நார் கழிவு உரம் இடவேண் டும். சாகுபடிக்கு மொத்தம் பரிந்துரைக்கப்படும் உர அளவான 119 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 34 கிலோ பொட்டாஸ் இதில் அடியுரமாக மட்டும் 30 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 17 கிலோ பொட்டாஸ் இடவேண் டும். விதைத்த 25-ம் நாள் முதல் மேலுரமாக 60 கிலோ யூரியா, 45-ம் நாள் 29 கிலோ யூரியா, 17 கிலோ பொட்டாசும் இடவேண்டும். விதைத்த 3 நாட்களுக்குப்பின் மண் ணில் போதுமான ஈரம் இருக்கும் போது களைக்கொல்லி பயன்படுத்த வேண்டும். ஆரம்பக்கட்டத்தில் குருத்து புழு தாக்குதல் தென்படும் இதனை கட்டுப்படுத்த செடிக்கு 2 கிராம் வீதம் பியூரடான் குருனை மருந்தினை மண லில் கலந்து செடியின் குருத்தில் விதைத்த 20 வது நாள் இடவேண்டும். தேவைக்கேப்ப 6 முதல் 8 முறை நீர்பாசனம் செய்ய வேண்டும். பூக்கும் தருணத்தில் தண்ணீர் பற்றாக் குறை இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண் டும். இவ் வாறு தொழில் நுட்பங் களை கடைப்பிடித் தால் 1 ஏக்கரில் 2,500 முதல் 3,000 கிலோ வரை மகசூல் எடுத்து 45,000 ரூபாய் வரை வருமானம் பெற லாம். இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

## <u>உளுந்து விதைகள் தயாரிப்பது எப்படி?</u>

புதுக்கோட்டை, : தரமான உளுந்து விதை களை தயாரிப்பது எப்படி? என்பது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. புதுக்கோட்டை வட் டார வேளாண் தொழில்நுட்ப மேலாண் முகமை அட்மா விரிவாக்க

சீரமைப்புத் திட்டத்தின் கீழ் திருமலைராயசமுத்திரம் கிராமத்தில் உள்ள அம்மா பண்ணை மகளிர் குழு விவசாயிகளுக்கு தரமான உளு ந்து விதை உற்பத்தி செய்தல் தொடர்பாக திறன் வளர் ப்பு பயிற்சி முகாம் நடைபெற் றது. பயிற்சி முகாமுக்குத் தலைமை வகித்த வட்டார தொழில்நுட்பக் குழு அமைப்பாளரும், வேளாண் உதவி இயக்குநருமான ரவிச்சந்திரன் தரமான உளுந்து வகைகளை தயாரிப்பது குறித்து பயிற்சி அளித்து சிறப்புரையாற்றினார். குறிப்பாக, உளுந்து ரகங் களை எவ்வாறு தேர்ந்தெடுப்பது? உளுந்து விதை யுடன் உயிர் உரம் மற்றும் பூஞ்சாணக் கொல்லியை பயன்படுத்தி எவ்வாறு விதைநேர்த்தி செய்வது? மற்றும் விதைக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக எடுத்துக் கூறி னார். உளுந்து பயிரில் சிக்கனமாக நீர்ப்பாசனம் செய் வது பற்றியும் பூச்சி நோய் கண்டறிந்து தேவையான அளவு மட்டும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி சுற்றுச்சூழலை பாதுகாப்பது பற்றி யும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா விளக்கினார். உளுந்து சாகுபடியில் முக்கிய தொழில்நுட்பங்களான 2 சதவிகித டிஏபி தெளிப்பு முறை குறித்தும், அக்கரைசலை தயார் செய் யும் முறை குறித்தும் உதவித் தொழில்நுட்ப மேலாளார் நவாப் ராஜா, அறுவடைக் குப் பின்பான தொழில்நுட்பங்கள் மற்றும் உளுந்து விதைகளை பூச்சிகள் தாக்காதவாறு சேமிக்கும் முறைகள் பற்றி உதவித் தொழில்நுட்ப மேலாளார் அருளரசு ஆகி யோர் விளக்கினர். முகாம் நிறைவில் தரமான உளுந்து விதை சாகுபடிக்கான தொழில்நுட்ப கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

## <u>அரியலூரில் திடீர் மழை பெய்து பூமி குளிர்ச்சிவெப்பம் தணிந்து மக்கள் மகிழ்ச்சி</u>

அரியலூர், : அரியலூரில் நேற்று மதியம் திடீர் மழை பெய்தது. வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அரியலூரில் கடந்த ஜனவரி தொடக்கத்தில் மழைபெய்தது.

பிறகு மழைக்கான அறிகுறிகளே இல்லாமல் போய்விட்டது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் நாளுக்கு நாள் வெகுவாக குறைந்து கொண்டே வந்தது. மேலும் இந்தாண்டில் கோடைக்காலம் துவங்குவதற்கு முன்னதாகவே வெய்யில் பொதுமக்களை வாட்டி எடுத்து வருவதால் வெப்பம் தாங்காமல் இப்போதே குடைகளோடு வெளியில் செல்கின்றனர். இந்நிலையில் நேற்று பங்குனி மாதம் தொடங்கிவிட்ட நிலையில் வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் என்று பொதுமக்கள் நினைத்து வந்த வேளையில், அரியலூர் மாவட்டம் முழுவதும் நேற்று வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டு லேசான தூறல் மழை பெய்தது. இதில் திருமானூர், கீழப்பழுவூர், செந்துறை, தா.பழூர் ஆகிய பகுதிகளில் லேசான தூறல் மழை காலை முதல் மதியம் வரை விட்டுவிட்டு பெய்தது. அரியலூாரில் மட்டும் நேற்று மதியம் 45 நிமிடம் மழை பெய்தது. கோடை வெப்பத்தில் சிரமப்பட்ட மக்களுக்கு இந்த மழை சூட்டை தணித்துள்ளதால் அனைவரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அரியலூர் மாவட்டத்தில் டெல்டா பகுதியான தா.பழூர் மற்றும் திருமானூர் பகுதியில் நடப்பு சம்பா நெல் சாகுபடி பயிரிட்டு தற்போது அறுவடை பணியை முடிக்கும் தருவாயில் உள்ளனர். மேலும் தோட்டக்கலை பயிர்களான முந்திரி, நிலக்கடலை, கத்திரி, முருங்கை உள்ளிட்ட பல்வேறு பயிர்களை பயிர் செய்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று லேசான மழை பெய்தாலும் பூமி குளிர்ந்துள்ளதால் செடி, கொடிகளுக்கு இதமாகி பசுமையடைந்துள்ளது.

**<u>பொன்னமராவதியில் கோடை மழை</u>**

பொன்னமராவதி, : பொன்னமராவதி, மணமேல்குடி உள்ளிட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்துள்ளதால், விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். புதுக்கோட்டை மாவட் டம் முழுவதும் கடந்த சில வாரங்களாக கோடையைப் போல் வெயில் கொளுத்தி வந்தது. இதனால் சாலை களில் நடந்துசெல்லும் பாதசாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இரவிலும் கடும் புழுக்கம் காணப்பட்டது.

இந்நிலையில், புதுக் கோட்டை, கறம்பக் குடி, மணமேல்குடி, பொன்னமராவதி உள்ளிட்ட மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் பரவலாக நேற்று மழை பெய்தது. பொன்னமராவதியில் பகுதி யில் கடும் வெயில் வாட்டி வந்த நிலையில், கடந்த 14ம் தேதி இரவு பரவலாக மழை பெய்தது. இதே போல நேற்று (15ம் தேதி) காலையும் லேசான மழைபெய்தது. இதனால் இப்பகுதியில் கடும் வெப்பம் குறைந்து குளுமை காணப்பட்டது.

## விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்கல்

திருத்துறைப்பூண்டி,: திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி லயன்ஸ் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் பொறியாளர் கைலாசநாதன் தலைமை யில் நடைபெற்றது. கூட்டத்தில் பெண் ஒருவருக்கு தையல் இயந்திரம், ஒரு விவசாயிக்கு கைதெளிப்பான், மற்றும் விவசாயிகளுக்கு உபகரணம் வழங்கப்பட்டது. கூட்டத்தில் முன்னாள் தலைவர்கள் நாராயணசாமி, சுரேஷ், அசோக்குமார், சங்கர்கணேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். செயலர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

## நாகை மாவட்டவிவசாயிகளுக்கு மானியத்துடன் டிராக்டர்

நாகை,: நாகை மாவட்ட விவசாயிகளுக்கு மானியத்தில் டிராக்டர் வழங்கப்படவுள்ளது. இதற் காக விண்ணப்பிக்க அழை ப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாகை மாவட்டத்தில் 2014-15ம் ஆண்டில் வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டத் தின் மூலம், ஆதி திராவிட விவசாயிகளுக்கு 8 முதல் 20 வரை குதிரை திறன் கொண்ட டிராக்டர்களுக்கு அதிகபட்சமாக ரூ.1 லட்சம் மானியத்தில் 6 டிராக்டர்கள் வழங்கவும், 20க்கு மேற்பட்ட 70 குதிரைத் திறன் வரை உள்ள டிராக்டர்களுக்கு அதிகபட்சமாக

ரூ.1.25 லட்சம் வரை மானியத்தில் 14 டிராக்டர்கள் வழங்கவும், இதர பொது விவசாயிகளுக்கு 20க்கு மேற்பட்ட 70 குதிரை திறன் வரை உள்ள டிராக்டர் களுக்கு அதிகபட்சமாக ரூ.1.20 லட்சம் மானியத்தில் 1 டிராக்டரும், வேளாண். பொறியியல் துறை மூலம் மொத்தம் ரூ.24.75 லட்சம் மானியத் தில் வழங்க திட்டமிடப்பட்டு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் பயன்பெற நாகை வருவாய் கோட்டத்தை சேர்ந்த விவசாயிகள், உதவி செயற்பொறியாளர், வேளாண். பொறியியல் துறை, நீலா தெற்கு வீதி (பாரத ஸ்டேட் வங்கி எதிரில்) நாகை அலுவலகத்திலும், மயிலாடுதுறை வருவாய் கோட்டத்தை சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண். பொறியியல் துறை, கச்சேரி சாலை, மயிலாடுதுறை அலுவலகத்திலும் விண்ணப்பிக்கலாம். சென்னை தலைமை பொறியாளரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் டிராக்டர் மாடல்களில் விவசாயிகள் தங்கள் விரும்பியதை தேர்வு செய்து கொள்ளலாம். அரசு மானியத்துடன் டிராக்டர்களை பெறுவதற்கு மானியம் போக மீதமுள்ள தொகைக்கான வரைவோலைகளை விவசாயிகள், தாங்கள் தேர்வு செய்யும் நிறுவனத்தின் பெயரில் எடுத்து வழங்கி பயன்பெறும்படி, கலெக்டர் பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

## <u>மண் பரிசோதனை செய்வது எப்படி? விவசாயிகளுக்கு வேளாண்துறை ஆலோசனை</u>

பழநி, : வளமான சாகுபடிக்கு மண் பரிசோ தனை செய்ய வேண்டும் என குறித்து வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர் களது அறிக்கையில் கூறியிருப்பதாவது: மண் பரிசோதனைக்கு அரை கிலோ மண் போதும். நிலத்தில் எடுக்கப்படும் மண் சரியான மாதிரியாக இருந்தால்தான் நிலத்தின் உண்மையான தன்மை தெரியும். ஒவ் வொரு முறை பயிர்

செய்வதற்கு முன்னும், பயிர் அறுவடை செய்த பின்னும் மண் மாதிரி எடுத்து பரிசோதனை செய்ய வேண்டும். ஒரு நிலத்தின் மண் வெவ்வேறாக இருந்தால் தனித் தனியாக மாதிரி எடுக்க வேண்டும். எரு குவித்த இடம், வரப்பு வாய்க்கால் அருகில் மற்றும் மர நிழலில் மண் மாதிரி எடுக்கக் கூடாது. ஒவ்வொரு வயலுக்கும் தனித்தனியாக எடுக்க வேண்டும். மண் மாதிரி எடுக்கப்படும் இடத்தில் இருக்கும் இலை, சருகு, புல் ஆகியவை களை செதுக்காமல் அப்புறப்படுத்த வேண்டும். நெல், கேழ்வரகு போன்ற தானியப்பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகளுக்கு அரை அடி ஆழமும், கரும்பு, பருத்தி, வாழை, காய்கறி பயிர்களுக்கு முக்கால் அடியும், தென்னைக்கு 3 அடியும், மா, சப்போட்டா போன்ற பழ மரங் களுக்கு 6 அடி ஆழத்தில் குழி வெட்டி அடுக்கு வாரியாக, தனித்தனியாக மண் மாதிரி எடுக்க வேண்டும். காலப்பயிர்களுக்கு ‘வி’ வடிவில் குழி வெட்ட வேண்டும். வெட்டிய குழியின் இரு ஓரங்களிலும் மண்வெட்டியின் தகட்டால் மேலிருந்து கீழ் வரை 1 சென்டிமீட்டர் கனத்திற்கு சீராக மண்ணை சுரண்டி எடுத்து சேகரிக்க வேண்டும். இதுபோல் ஒரு ஏக்கருக்கு 10 முதல் 15 இடங்களில் மண் சேகரித்து அதை சுத்தமான பிளாஸ் டிக் பை அல்லது சாக்கில் கொட்டி, நன்றாக கலந்து கல், கண்ணாடி, வேர் தண்டுகளை அப்புறப்படுத்த வேண்டும். பின், நான்கு சம போக முறையில் அரைக்கிலோ மண்ணை எடுத்து துணிப்பையில் கட்ட வேண்டும். மண் மாதிரியுடன் விவசாயின் பெயர் மற்றும் அஞ்சல் முகவரி, கிராமத்தின் பெயர், நிலத்தின் பெயர், இறவை அல்லது மானாவாரி, பயிரிடப்பட்ட முன் பயிர் அடுத்து பயிரிடப் போகும் பயிர் பிரச்சனை இருப்பின் அதன் விபரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு கூறியுள்ளனர்.

## நத்தத்தில் திடீர் மழை

நத்தம், : நத்தம் பகுதியில் நேற்று முன்தினம் வானம் கருமேகத்துடன் காணப்பட்டு, ஆங்காங்கே தூரல் மழை விழுந்தது. பின்னர் நள்ளிரவில் திடீ[a] ரன மழை பெய்தது. இந்த மழை 30 நிமிடம் வரை நீடி த்தது.இது குறித்து இப்பகுதி விவசாயிகள் கூறு கையில், மாமரங்களில் உள்ள பிஞ்சு கள் உறுதியுடன் இருக்கவும் நீர்ச்சத்துடன் பருமனாவதற்கும் ஏற்ற மழையாகும். நேற்று முன்தினம் இரவு மிதமான காற்றுடன் மழை பெய்தது. இதனால் மரங்களில் உள்ள மாம்பிஞ்சுகள் அதிகம் உதிரவில்லை. அடுத்தடுத்து மழை பெய்தால் மா, தென்னை மரங்கள் வறட்சியிலிருந்து மீண்டு நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது' என்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வேளாண் ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம்




'உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு கழித்து இருப்போரை நிந்தனை செய்வோம்' என்று பாடினார், பாட்டுக்கொரு புலவன் பாரதியார் அன்று. தமிழ்நாட்டில் சர்வதேச முதலீட்டாளர்கள்

மாநாடு நடக்கிறது. இதையடுத்து வேளாண் வளர்ச்சிக்கும், மீன்வள வளர்ச்சிக்கும் சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதே விவசாயிகளின் இன்றைய கோரிக்கை. பலர் விவசாயத்தில் நல்ல வருமானம் கிடைக்கவில்லை என்று வேறு வேலை தேடிச்செல்லும் நிலையில், தற்போது இயற்கை வேளாண்மைக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு கிடைக்கும் சூழ்நிலையில், படித்த பல ஆண்களும், பெண்களும் நல்ல சம்பளத்தை பெற்றுக்கொண்டிருக்கும் வேலைகளை விட்டுவிட்டு, விவசாயத்தில் ஈடுபட முன்வந்ருப்பதும், நகர்ப்புறங்களில் இயற்கை வேளாண்மையால் பயிரிடப்பட்ட அரிசி, காய்கறிகள், பழங்கள், கீரை வகைகளுக்கு கூடுதல் விலை என்றாலும், அதை பொருட்படுத்தாமல் மக்கள் வாங்க முன்வருவதும் விவசாயத்தில் புதுயுகம் படைத்துள்ளது. இந்த நிலையில், தமிழக வேளாண் பல்கலைக்கழகமும், திருச்சியில் உள்ள அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், அங்கேயே ஜெயலலிதா, மகளிருக்காக தொடங்கிவைத்த தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு நல்ல விளைச்சலுக்கான புதிய கண்டுபிடிப்புகளை கொண்டுவந்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது. இந்த வேளாண் கல்லூரியில் ‘திருச்சி 3’ என்ற பெயரில் இட்லி மாவுக்கான புதிய அரிசி ரகம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதை திருச்சிக்கு அருகில் உள்ள பூங்குடி கிராமத்தில் உள்ள 30 விவசாயிகள், 10 ஏக்கரில் சாகுபடி செய்து, ஏக்கருக்கு 1.5 டன் வீதம் 15 டன் நெல்விளைச்சல் எடுத்து சாதனை படைத்துள்ளனர். இதுமட்டுமல்லாமல், இந்த நெல்லை அவித்து, காயப்போட்டு, ரைஸ் மில்லில் அரைத்து, உமி, தவிடு நீக்கியபிறகு 71.30 சதவீத அரிசி கிடைப்பதால், இப்போது அந்த நெல்லை வாங்க வியாபாரிகள் போட்டி போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதுபோல, தோட்டக்கலை கல்லூரியில் படிக்கும் 40 மாணவிகளும் மிகுந்த ஆர்வத்தோடு தோட்டக்கலை பயிர் சாகுபடியில்

ஈடுபட்டு வருகிறார்கள். ஒரு ஏக்கர் நிலத்தில் 50 பெரிய மாமரங்கள் பயிரிடுவதற்கு பதிலாக, உயர் ரக 500 மாமரங்களை பயிரிட்டு, அதை அதிக உயரம் வளரவிடாமல் அதிகபட்சமாக 15 அடி உயரம் மட்டுமே வளரும் வகையில், அவ்வப்போது வெட்டிவிட்டு, சொட்டு நீர் பாசனம் மற்றும் சில நவீன முறைகள் மூலம் சாகுபடி செய்து அதிக விளைச்சலை பெறும் முறைகள் இந்த கல்லூரியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதே முறையை மாமரத்துக்கு மட்டுமல்லாமல், கொய்யா போன்ற மற்றும் சில பழவகைகளுக்கும் செயல்படுத்தலாம். மேலும், பழவகை பயிர்களுக்கு அதிக பூச்சி மருந்து பயன்படுத்த தேவையில்லை என்பதையும் தங்கள் செயல்முறை பயிற்சியில் நடைமுறைப்படுத்திவருகிறார்கள். வேளாண் பல்கலைக்கழகமும், மகளிர் தோட்டக்கலை கல்லூரியும் இதுபோல விவசாயிகளுக்கு லாபம் தரும் அதிக கண்டுபிடிப்புகளில் ஊக்கம் காட்டி, அத்தகைய கண்டுபிடிப்புகளை அனைத்து விவசாயிகளும் பயன்பெறத்தக்கவகையில், வேளாண்துறை நடவடிக்கை எடுக்கவேண்டும். விவசாயம் லாபகரமான தொழிலாக இருந்தால், தற்போது ஆண்டுக்கு ஆண்டு சாகுபடி பரப்பு குறைந்துகொண்டே போகும்நிலை மாறி, வேகமாக சாகுபடி பரப்பும் உயரும். விவசாய தொழிலும் வளரும்.

## வேளாண் துறை அதிகாரி பணிகள்



வேளாண்மை ஆராய்ச்சியாளர்கள் தேர்வு வாரியத்தின் (ஏ.எஸ்.ஆர்.பி.), புதுடெல்லி தலைமை அலுவலகத்தில் இருந்து பல்வேறு அதிகாரி பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியாகி உள்ளது. இணை இயக்குனர், உதவி பொது இயக்குனர், இயக்குனர், தலைமை அதிகாரி, முதல்வர், ஆராய்ச்சியாளர், முதுநிலை ஆராய்ச்சியாளர், திட்ட ஒருங்கிணைப்பாளர்

உள்ளிட்ட அதிகாரி பணிக்கு மொத்தம் 72 பேர் தேர்வு செய்யப் படுகிறார்கள். அதிகபட்சம் 60 வயதுடையவர்களுக்கும் பணியிடங்கள் உள்ளன. வேளாண் என்டமாலஜி, வேளாண் அறிவியல், வேளாண் விரிவாக்க அறிவியல், வேளாண் பொறியியல், வேளாண் கட்டமைப்பியல், உணவு பொறியியல் உள்ளிட்ட வேளாண்மை சார்ந்த பிரிவுகளில் ஆராய்ச்சியாளர் பட்டம் பெற்றவர்களுக்கு பணிகள் உள்ளன. விருப்பம் உள்ளவர்கள் ரூ.500 கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம். எஸ்.சி., எஸ்.டி. பிரிவினர், ஊனமுற்றோர், பெண் விண்ணப்பதாரர்களுக்கு இந்த கட்டணம் கிடையாது. விருப்பமும், தகுதியும் உள்ளவர்கள் குறிப்பிட்ட மாதிரியான விண்ணப்பத்தை தேவையான சான்றுகளுடன் The Secretary, ASRB, Krishi Anusandhan Bhawan I, New Delhi-110012 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். 24-3-15-ந் தேதிக்குள் விண்ணப்பம் சென்றடைய வேண்டும். விரிவான விவரங்களை மார்ச் 7-13 தேதியிட்ட எம்ப்ளாய்மென்ட் நியூஸ் இதழில் பார்க்கலாம்.

## கூட்டுறவு விவசாயம் மூலம் தரிசு நிலத்தில் நெல் உற்பத்தி அறுவடையை உம்மன் சாண்டி தொடங்கி வைத்தார்



பெரும்பாவூர், ஆலப்புழையில் தரிசு நிலத்தில் கூட்டுறவு விவசாயம் மூலம் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. நெல் அறுவடையை முதல்-மந்திரி உம்மன் சாண்டிதொடங்கிவைத்தார்.

தரிசானவிவசாயநிலம்

ஆலப்புழை மாவட்டத்தில் உள்ள குட்டநாடு கேரளத்தின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது. குட்டநாடு சுற்றுவட்டார பகுதியில் சித்திரக்காயல் என்னும் இடம் உள்ளது. அங்கு 20 ஆண்டுகளுக்கு முன்பு

வரை விவசாயம் செய்யப்பட்டு வந்தது. குறிப்பிட்ட சில காரணங்களால் அங்கு விவசாயம் செய்வது கைவிடப்பட்டதால் அந்த பகுதியில் உள்ள 225 எக்டேர் விவசாய நிலம் தரிசு நிலமாக மாறியது. அந்த பகுதியை மீண்டும் விளைநிலமாக மாற்ற அடுத்தடுத்த அரசுகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டன. ஆனால் எதுவும் பலன் அளிக்கவில்லை. இந்த நிலையில் ஆலப்புழை கலெக்டர் பத்மகுமார் கூட்டுறவு விவசாயம் என்னும் திட்டத்தின் மூலம் அந்த தரிசு நிலத்தில் நெல் விவசாயம் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளைஎடுத்தார்.

உம்மன்சாண்டிதொடங்கிவைத்தார்

அதன்படி 225 எக்டேர் நிலத்தில் 100 எக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. அவை விவசாயிகளுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டன. மேலும் அந்த நிலத்தில் நெல் விவசாயம் மேற்கொள்ள அரசு நிதியுதவி வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து அங்கு நெல் விவசாயம் செய்ய விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டினார்கள். தொடர்ந்து டிராக்டர்கள் மூலம் நிலம் பண்படுத்தப்பட்டு, 20 ஆண்டுகளுக்கு பிறகு அங்கு விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் நெற்பயிர்கள் நன்கு வளர்ந்து அறுவடைக்கு தயாராயின. இதையடுத்து அறுவடை தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முதல்-மந்திரி உம்மன் சாண்டி கலந்து கொண்டு நெல் அறுவடையை தொடங்கி வைத்தார். அதை தொடர்ந்து அவர் பேசியதாவது:- குட்டநாடு அதன் இழந்த பெருமையை மீட்டெடுத்து உள்ளது. தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதே நம் முக்கிய கொள்கையாக இருக்க வேண்டும். ஏனெனில் நமது நாட்டின் முதுகெலும்பே விவசாயம் தான். இந்த பகுதியில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு தேவையானவற்றை செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கும். இதற்கான நடவடிக்கைகளை கலெக்டருக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

மிச்சநிலத்திலும்விவசாயம்

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயத்துறை மந்திரி மோகனன்

கூறும்போது, மீதியுள்ள 125 எக்டேரையும் விவசாய நிலமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் முதல்-மந்திரி உம்மன் சாண்டி சிறந்த முறையில் விவசாயம் மேற்கொண்டதற்காகஜான் என்பவரை பொன்னாடை போர்த்தி கவுரவித்தார். இதில் கலெக்டர் பத்மகுமார், மாவட்ட ஊராட்சி தலைவர் பிரதீபா தேவி மற்றும் விவசாயத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**<u>கூடலூரில் சாரல் மழை காபி விளைச்சல் அதிகரிக்க வாய்ப்பு விவசாயிகள் மகிழ்ச்சி</u>**



கூடலூரில் சாரல் மழை பெய்து வருவதால் காபி விளைச்சல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்து உள்ளனர்.

அராபிக்கா,ரோபஸ்டாகாபிரகங்கள்

கூடலூர், பந்தலூர் தாலுகா மற்றும் வயநாடு மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப் பளவில் காபி பயிரிடப்பட்டு உள்ளது. இதுதவிர கர்நாடகா மாநிலம் குடகு மாவட்டத்திலும் காபி விளைவிக்கப் படுகிறது. இங்கு அராபிக்கா, ரொபஸ்டா ஆகிய காபி ரகங் கள் விளைவிக்கப் படுகின்றன. இந்த நிலையில் கூடலூர் பகுதி யில் காபி காய்கள் அறுவடை சீசன் நிறைவு பெற்று உள்ளது. மேலும் கோடை காலமும் தொடங்கி விட்டதால் வறட்சியான காலநிலை நிலவுகிறது. இதனால் கோடை மழை பெய்தால் மட்டுமே காபி செடிகள் மீண்டும் பூக்கும் வாய்ப்பு ஏற்படும். இதற்கு ஏற்ப கடந்த சில தினங்களுக்கு முன்பு கூடலூர் பகுதி யில் பரவலாக நல்லமழை பெய்தது. இதனால் காபி செடிகள் நன்கு பூத்துகாணப்படுகிறது.

விளைச்சல்அதிகரிக்கவாய்ப்பு

இதேபோல் கூடலூர், பந்தலூர் தாலுகா பகுதி யிலும் நல்ல மழை பெய்தது. இதனால் காபி செடி கள் நன்கு பூத்து குலுங்குகிறது. இதற்கு ஏற்ப அடிக்கடி சாரல் மழையும் பெய்து வருகிறது. குளுகுளு சீசனாக காலநிலை மாறி உள்ளதால் காபி செடிகளில் பூத்து உள்ள அனைத்து பூக்களும் காய்களாக மாறுவதற்கு ஏற்ற சூழல் நிலவுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். கோடை மழை தீவிரம் அடைந்து தொடர் மழையாக பெய்தால் காபி விளைச்சல் பாதிக்கும். ஆனால் தற்போது பெய்யும் சாரல் மழையால் காபி செடிகளுக்கு தேவையான ஈரப்பதம் கிடைத்து வருகிறது. இதனால் பூக்கள் உதிரும் வாய்ப்பு மிக குறைவு என விவசாயிகள் நம் பிக்கை தெரிவித்து உள்ளனர். வழக்கமாக கோடை காலத்தில் மழை பெய்த உடன் காபி செடிகள் பூத்து விடும். ஆனால் அதன் பின்னர் மழை பெய்யாமல் போன காலங்களும் உண்டு. அன்றைய நிலைமையில் காபி சரிவர விளைச்சல் இருக்காது என விவசாயிகள் தெரிவித்து உள்ளனர். கூடலூர் பகுதியில் நிலவும் தற்போதைய காலநிலையின் படி காபி விளைச்சல் எதிர் வரும் காலங்களில் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக கருதப்படுகிறது.

## <u>ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விவசாயிகளின் கோரிக்கை மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை கலெக்டர் சம்பத் தகவல்</u>

விழுப்புரம், விழுப்புரம் மாவட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விவசாயிகளின் கோரிக்கை மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவதாக கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

<u>உடனுக்குடன்பட்டுவாடா</u>

விழுப்புரம் மாவட்டத்தில் 17 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களும், 1 துணை ஒழுங்குமுறை விற்பனைக்கூடமும் உள்ளது. இவற்றின் மூலம் நெல், மணிலா, எள், கம்பு, கேழ்வரகு, உளுந்து, பச்சைப்பயிறு, மக்காச்சோளம்,

பருத்தி மற்றும் இதர விவசாய விளைபொருட்கள் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 5 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் சுமார் 8 லட்சம் விவசாயிகள் பயன்பெறுகின்றனர். விற்பனை கூடங்களில் விவசாய விளை பொருட்களுக்கு மறைமுக ஏலம் மூலம் போட்டி விலை நிர்ணயம் செய்யப்பட்டு அதிக விலை கோரும் வியாபாரிகளுக்கு விலை அறிவிப்பு செய்யப்படுகிறது. மார்க்கெட் நிலவரப்படி நிர்ணயம் செய்யப்படும் விலை ஏற்றத்துடனும், பருவ வரத்து மற்றும் இதர உள்நாட்டு விளைச்சல் அதிகரிப்பு காலத்தில் விலை இறக்கத்துடனும் இருக்க வாய்ப்பு உள்ளது. விலை வீழ்ச்சி காலத்தில் விவசாயிகள் தங்களது விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் இருப்பு வைத்து விற்பனை செய்யலாம்.

<u>பணப்பட்டுவாடா</u>

பணப் பட்டுவாடா தினமும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதிகப்படியான வரத்து வரும் காலங்களில் தாமதம் ஏற்படும் சூழல் நிலவுகின்றது. இந்த குறைபாடுகளை களைய வியாபாரிகளுடன் கூட்டங்கள் நடத்தி தினசரி பட்டுவாடா நடைமுறைக்கு கொண்டு வர கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

<u>அடிப்படைவசதிகள்</u>

விவசாயிகளுக்கான அடிப்படை தேவையான மின் வசதி, கழிவறை, குடிநீர் வசதி, ஓய்வறை வசதிகளை முழுமையாக செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு நடப்பு ஆண்டில் 47 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இவை தவிர மேலும் புதியதாக கழிவறை தொகுப்பு கட்டிடங்கள் அரசின் அனுமதியுடன் மேம்படுத்த நடவடிக்கையில் உள்ளது. மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விளைபொருள் வரத்து அதிகமாக வருவதால். தேனி, தஞ்சாவூர், காஞ்சீபுரம், திருவண்ணாமலை, சேலம், கோயம்புத்தூர், பெரம்பலூர், ஈரோடு, கடலூர், மதுரை போன்ற மாவட்டங்களில் இருந்தும் வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொள்கின்றனர்.

இவர்கள் ஒரே சமயத்தில் பல ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் கொள்முதல் செய்ய உள்ளதால் சம்பந்தப்பட்ட உள்ளூர் முகவர்கள் மூலம் ஏலத்தில்கலந்துகொள்கின்றனர்.

<u>கோரிக்கைகள் மீது நடவடிக்கை</u>

மேலும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விவசாயிகளுக்கு எவ்வித குறைபாடும் இன்றி சேவை புரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அவர்களின் கோரிக்கை மனுக்கள் மீதும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.